## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXV BNSS)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT*
## *Mannargudi*
## *CC.No. 362/2019 – P.W. 5 (LW7)*

| | |
|---|---|
| *Name* | கோவிந்தராசு தலைமை மருத்துவர்<br>கூத்தாநல்லூர் அரசு மருதுதுவமனை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 53 |

**2 எதிரி ஆஜர். 1 வது ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 05.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது கூத்தாநல்லூர் மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 18.04.2019 ம் தேதியன்று மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் 24 மணி நேர பணியில் இருந்தபோது அன்று இரவு 09.00 மணியளவில் சசிக்குமார் என்பவர் தன்னுடன் உடன் பணிபுரியும் பவானந்தம் என்பவரை அழைத்து வந்து அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சையளிக்க கோரினார். அவரை நான் விசாரித்தபோது அன்று இரவு 08.30 மணிக்கு மன்னார்குடி சந்தப்பேட்டை பஸ் ஸ்டாண்டில் இவரை மூகாம்பிகை தனியார் பேருந்து டிரைவர் மற்றும் கன்டக்டர் இருவரும் லிவரால் தாக்கி காயப்படுத்தியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரது வலது காலில் சிராய்ப்பு காயம் 2X2 cm அளவில் இருந்தது. மற்றொரு வீக்க காயம் இடது சிறு விரலில் 1X1 cm அளவில் இருந்தது. அவருக்கு சிகிச்சையளித்து உள்நோயாளியாக வார்ட்டில் அனுமதித்தேன். அவருக்கு சிகிச்சை முடிந்து

20.04.2019 ம் தேதியன்று வார்ட்டில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட இரண்டு காயங்களும் சாதாரண காயம் என சான்றளித்தேன். **மேற்படி விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நோயாளி என்னிடம் வரும்போது தன்னை கையாலும், காலாலும் தாக்கியதாக என்னிடம் கூறவில்லை. முதல் காயத்தை பொருத்தவரை வலது காலில் எந்த பகுதி என குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. தாக்குதல் இன்றி வேறு விதத்திலும் சிராய்ப்பு காயமும், வீக்கமும் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். நான் வீக்கத்தை பொறுத்து பார்த்தபோது நிற மாற்றம் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். லிவர் என்பது இரும்பு ராடால் சொன்ன காயத்தை விட அதிகமான காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். ஆயுதத்தை காண்பித்து கருத்துரை கேட்டால் சொல்ல ஏதுவாக இருக்கும் என்றால் சரிதான். சொன்ன நேரத்திற்கு காயமானாது ஒரு மணிநேரத்திற்கு முன்பாக ஏற்பட்டியிருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi